

# ஸ்டார்ட் அப் நிறுவனங்களை வெற்றிகரமாக நடத்துவது எப்படி?



கட்டுரையாளர்
K. T. ராஜன்,
சேர்மன் EPC, மதுரை

சமீபத்தில் வெளிவந்த "சூரரை போற்று" திரைப்படம் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. அதில் கேப்டன் கோபிநாத் அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் புதிய தொழிலை (Deccan Airlines) தொடங்கும்போது அவர் சந்தித்த ஏற்ற இறக்கங்கள் பற்றி அழகாக காட்சி அமைக்கப்பட்டு இருந்தது. அவர் ஒரு ஸ்டார்ட் அப் தொழில் முனைவோராக, எல்லா தரப்பு மக்களும் விமானத்தில் பயணம் செய்ய வேண்டும் (Low Cost Airlines) என்ற கனவோடு, அதை ஒரு லட்சியமாக எடுத்து பல தடைகளை தாண்டி வெற்றி பெறுவது, ஸ்டார்ட் அப் தொழில் முனைவோருக்கு ஒரு முன்னுதாரணமாக இருக்கிறது.

## திட்டமிடுதல் (Planning)

திட்டமிடுதல் என்பது எந்த ஒரு செயலுக்கும் அடித்தளமாகும். If you fail to plan, you are planning to fail.

ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு தேவையானவை:

* வியாபார திட்டம் (Business Plan)

* முதலீடு (Investment)
* தொழிலுக்கு ஏற்ற இடம் (Place of doing Business)
* வேலையாட்கள் (Manpower)
* மூலப்பொருள் (Raw Material)
* பொருளின் விலை நிர்ணயம் (Product Pricing)
* நிறுவனத்தின் நடைமுறை மூலதனம் (Working Capital Management)
* நிறுவனத்தை நடத்தும் திறன் (Managerial Skills)

ஸ்டார்ட் அப் தொழில்முனைவோர்கள் எல்லோரும் "வெற்றி" என்ற ஒன்றை அடையவேண்டும் என்ற குறிக்கோளுடன்தான் தொழிலை தொடங்குகிறார்கள். ஆனால் சில ஸ்டார்ட் அப் தொழில் முனைவோர்கள் தொழிலில் தோல்வி அடைவதும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. 90% க்கு மேல் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தொடங்கப்பட்ட 2 அல்லது 3 ஆண்டுகளில் தொடந்து நடத்த முடியாமல் தோல்வி அடைகின்றன. இதற்கு மேலே சொன்ன காரணங்கள் கடைபிடிக்க தவறியது தான்.

ஒரு ஸ்டார்ட் அப் அல்லது பிசினஸ் தொடங்குவதற்கு முன்பாக அதற்கு தேவையான நிதியை மதிப்பிடுவதுடன், அதனை எங்கெங்கு (Fixed Capital, Working Capital) எப்படி செலவிடப் போகிறோம், ஒவ்வொரு ஆண்டும் தேவைப்படும் நிதி எவ்வளவு, முதலீட்டாளர்களிடம் எத்தனை கட்டங்களாக நிதி திரட்ட இருக்கிறோம், எந்தெந்த கால கட்டங்களில் வங்கிகளை நாட வேண்டும், எந்தெந்த வகையில் நிதி ஆதாரங்களை திரட்டலாம், நிறுவனத்தின் வரவு மற்றும் செலவுக்கான ஆதாரம் போன்ற விரிவான திட்டமிடல் அவசியம்.

நிதி நிலைமை சரியாக இல்லாவிட்டால் ஸ்டார்ட் அப்



நிறுவனங்கள் இக்கட்டான சூழ்நிலைக்கு வந்துவிடும். ஸ்டார்ட் அப் தொழில்முனைவோர்கள் பலர் மிகவும் புதுமையான தொழில் திட்டம் (Innovative Startup Idea) வைத்திருப்பார்கள். ஆனால் சரியான நிதி ஒழுக்கம் (Financial Discipline) இல்லாவிட்டால், தொழிலைத் திறம்பட நடத்த முடியாது அல்லது அந்த திட்டத்தை தொழிலாக்க முடியாது. இவற்றையெல்லாம் ஏன் கூறுகிறேன் என்றால் ஸ்டார்ட் அப் தொழில்முனைவோர்களில் சிலர் தோல்வி அடைவதற்கு முதன்மை காரணம் நிதி சார்ந்த விஷயம்தான்! ஸ்டார்ட் அப் நிறுவனம் தங்களுடைய திட்ட அறிக்கையை (Project Report) முறையாக தயாரிக்க வேண்டும். அதை பொறுத்து தான் நிதி உதவி பெற முடியும்.

ஸ்டார்ட் அப் நிறுவனத்தின் செலவுகளை பல வகையாக பிரிக்கலாம்:

- ✶ இடத்திற்கான வாடகைச் செலவு (Rent)
- ✶ வேலையாட்கள் ஊதியச் செலவு (Labour Salary)
- ✶ லைசன்ஸ் செலவுகள் (License Fees)
- ✶ மூலப்பொருட்கள் வாங்குவதற்கான பணம் (Cost of Raw Material)
- ✶ மற்ற செலவுகள் (Others)

இந்த செலவுகளை எல்லாம் முடிந்த அளவு துல்லியமாக கணக்கிட்டுக் கொள்ள வேண்டும்.

எத்தனை பேரை உங்கள் நிறுவனத்தில் பணியமர்த்தப் போகிறீர்கள். எந்தெந்த நிலையில் அவர்கள் இருப்பார்கள் என்பதையும் வரையறுக்க வேண்டும்.

ஒரு நிறுவனம் தொடங்கப்படும் ஆரம்ப காலத்தில், தேவைக்கு அதிகமாக பணியாளர்களை சேர்ப்பது சிக்கலை ஏற்படுத்தும். அதே நேரத்தில் சரியானவர்களை சரியான பணிக்கு தேர்வு செய்வதும் முக்கியம். ஸ்டார்ட் அப் நிறுவனத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல அதைத் தொடர்ந்து கண்காணிக்கவும் வேண்டும். இதை சரியாக கடைபிடித்தால் ஸ்டார்ட் அப் நிறுவனத்தை வெற்றிகரமாக கொண்டு செல்லலாம்.

புதுமையான தொழில் திட்டங்களை (Innovative Startup Ideas) எப்படி கையாள வேண்டும் என்பது பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.